அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

## தமிழ் - ஆண்டு 9

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

புலவர் ஒருவர் ஒருநாள் இரவு நேரம் இயற்கை அழகைக் காண்பதற்கு விருப்பம் கொண்டார். அயலூரிலுள்ள பெரிய குளத்தை நோக்கி நடந்து சென்றார். செல்லும் வழியெங்கும் முழு நிலவின் ஒளி படர்ந்து வெளிச்சத்தைக் கொடுத்தது. நிலாவொளியில் வேகமாக நடந்து குளம் இருக்கும் இடத்தை அடைந்தார். அழகிய மலர்கள் நிறைந்த குளத்தைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தார். மலர்களின் நறுமணமும் அழகும் புலவரைக் கவர்ந்திழுத்து அவ்விடத்திலேயே உட்கார வைத்தது.

அங்கே இருந்தவாறு வானத்தை நிமிர்ந்து பார்த்தார். விண்மீன்கள் நிறைந்த வானம் புலவரின் மனத்தில் ஆயிரம் எண்ணங்களை உருவாக்கியது. கறுத்திருந்த இரவுப்பொழுதை வெளுப்பாக்கிய நிலவும் வெறுமையாய் விரிந்திருந்த வானத்தை அழகாக்கிய விண்மீன்களும் புலவரின் மனத்தில் புதிய இலக்கியங்களைப் படைக்கத் தூண்டின. மலர்களைத் தழுவி வந்த காற்றை நுகர்ந்தவாறு இயற்கையின் இனிய உணர்வைக் கவியின்பமாய்ப் படைக்கத் தொடங்கினார்.